தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.26 நாள் 11.08.2026

| CC. No. | 294/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாராமன் | த/பெ. | கந்தசாமி |
| வயது | 61 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | எலத்தூர் | தாலுக்கா | சீர்காழி |

<u>( 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர்.).</u>
<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை</u> :-

நான் எலத்தூரில் வசித்து வருகிறேன். நான் குன்னம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளராக பணிபுரிந்து 31.08.2025 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எதிரிகளை தெரியும். கடந்த 19.01.2009 முதல் 07.04.2009 வரை கொண்டல் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கத்தில் பொறுப்பு செயலாளராக பணிபுரிந்தேன். மேலும் 07.04.2009 முதல் 12.01.2012 வரை மேறப்டி கொண்டல் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கத்தில் அயல்பணி அடிப்படையில் எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். பின்னர் மீண்டும் 13.01.2012 முதல் குன்னம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கத்தில் பணியில் சேர்ந்துவிட்டேன். எனது பணிக் காலத்தில் கொண்டல் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கத்தில் 1-வது எதிரி கூறிய பணிகளை செய்து வந்தேன். மேற்படி கொண்டல் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கத்தில் 2011-ம் வருடத்தில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் துணை தினக்குறிப்பு பேரேட்டில் பக்கம் 1 முதல் 15 வரை 10.01.2012 வரை என்னால் எழுதப்பட்டுள்ளது. அதில் 15.12.2011 ஆம் தேதியிட்ட பக்கம் எண்.10-ல் நான் எழுதிய பக்கத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த திருத்தம் என்னால் செய்யப்பட்டது. அந்த துணை தினகுறிப்பு பேரேடு பக்கம் எண். 10 **அ.சா.ஆ.12** ஆகும். மேலும் மற்ற பக்கங்கள் பார்த்த போது சங்கத்தின் முன்னிலை எழுத்தர் திரு.இளங்கோவன் அவர்களால் தயாரிக்கப்பட்டிருந்தது அடித்தல் திருத்தலாக இருந்தது. பயிர் காப்பீட்டு

CJM, MAYILADUTHURAI.

இழப்பீடு தொகை வழங்கும் சமயத்தில் நான் எனது தாய் கிளையில் இருந்தேன். 1,2 எதிரிகள் சரிபார்த்த சிட்டா அடங்கல் மற்றும் சங்க ரசீதுகள் அடிப்படையில் பயிர் காப்பீட்டு பிரிமியத்திற்கான பயனாளிகளின் பட்டியல்களில் 3 பக்கங்களை நான் தயார் செய்தேன். இதர ஆவணங்களை சங்க எழுத்தர் 2–வது எதிரியால் எழுதப்பட்டது. என்னை உயர் அதிகாரி கோபாலகிருஷ்ணன் 15.05.2014–ல் விசாரித்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்க சட்டப்பிரிவு 81–ன் படியான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த விசாரணை அதிகாரியின் வாக்குமூலம் **அ.சா.ஆ.13** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 3 மற்றும் 4 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் மேற்படி கொண்டல் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கத்தில் 3 1/2 மாதம் பொறுப்பு செயலாளராக இருந்தேன். நான் 2009 முதல் 2012–ம் ஆண்டு வரை அங்கேயே பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் பி–17 ஆவணம் எழுதப்பட்டுபட்டது. மேற்படி ஆவணத்தை நான் தான் எழுதினேன். நான் ஆவணத்தில் எழுதியது சரிபார்க்கப்பட்டது என்றால் சரிதான். 81 விசாரணை அதிகாரி தயாரித்துள்ள விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நிர்வாகக்குழு இல்லாத காலகட்டத்தில் தனி அலுவலரால் சங்கத்தை மேற்பார்வையிட்டு நடத்துவார் என்றால் சரிதான். தனி அலுவலர் யார் என்றால் கூட்டுறவு சார்பதிவாளர் ஆவார். நான் பணிபுரிந்து காலத்தில் அவருக்கு கீழ் தான் சங்கம் இருந்தது. மேற்படி தனி அலுவலரின் அனுமதி இல்லாமல் செயலாளராலோ அல்லது அலுவலராலோ சங்கத்தை தண்ணிச்சையாக நடத்த முடியாது என்றால் சரிதான். தினமும் நடைபெற கூடிய நிகழ்வுகள் அனைத்தும் தனி அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டு அவருடைய ஒப்பம் பெற்ற பிறகு தான் சங்கம் செயல்படும் என்றால் சரிதான். அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளில் தனி அலுவலரின் ஒப்பம் பெறப்படும் என்றால் சரிதான். அவரும் பார்வையிட்டு கையெழுத்துயிடுவார் என்றால் சரிதான். அவருடைய அனுமதி இல்லாமல்

CJM, MAYILADUTHURAI.

எந்த ஒரு பட்டியலும் தயாரிக்க முடியாது என்றால் சரிதான். தனி அலுவலர் தான் நிதி ஒதுக்கீடு வரவு செலவு கணக்குகளை ஒப்புதல் அளிப்பது மற்றும் சரிபார்ப்பு செய்வார் என்றால் சரிதான். நான் பணிபுரிந்து காலத்தில் என்னுடைய சங்கத்தில் எந்த ஒரு தவறும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் பணிபுரிந்த காலத்தில் ஆண்டுதோறும் தணிக்கை நடைபெற்றது. அந்த காலகட்டத்தில் தணிக்கை குழுவினரால் எந்தவித மேற்குறிப்போ அல்லது குறைபாடோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 81 விசாரணை அதிகாரி என்னிடம் கேள்வி பதிலாக கேட்டு பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.18-ல் கேள்வி பதிலாக எதுவும் பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரிதான். அதன் காரணமாக என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. தனி அலுவலரை காப்பாற்றுவதற்காகவும், தனி அலுவலர் எனது உயர் அதிகாரி என்பதாலும் அவருக்கு ஆதரவாகவும் எதிரிகளுக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2-ம் எதிரி தரப்பில் மேற்சொன்ன குறுக்கு விசாரணை அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்பட்டது.)**

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.